**செ.வெ. எண்: 433** **நாள்: 24.07.2012**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. 'தோப்பு' என்.டி. வெங்கடாசலம் அவர்கள் வருவாய்த்துறையின் சார்பில் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்தும், துறையின் முக்கிய நடவடிக்கைகள் பற்றியும், தொடர்புடைய துறைத் தலைவர்களுடன் தலைமைச் செயலகத்தில் கடந்த இரு நாட்களாக (23,24.07.2012) விரிவான தொடர் ஆய்வினை மேற்கொண்டார்கள்.

குறிப்பாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டு, மாநிலம் முழுவதும் பெரிதும் வரவேற்பினைப் பெற்றுள்ள புதிய விரைவு பட்டா மாறுதல் திட்டம், வீட்டுமனைப் பட்டா வழங்குதல், முதியோர் ஓய்வூதியம், விலையில்லா மிக்சி, கிரைண்டர் மற்றும் மின்விசிறி வழங்கிடும் திட்டம், பள்ளி மாணவ மாணவியருக்குத் தேவையான வகுப்புச்சான்றிதழ், இருப்பிடச்சான்றிதழ் மற்றும் வருமானவரிச்சான்றிதழ் ஆகியவற்றை தாம் பயிலும் பள்ளிகளிலே பெறுதல் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள 'உழவர் பாதுகாப்புத் திட்டம்' ஆகிய திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும், நில நிருவாகம், நில சீர்திருத்தம், நிலஅளவை மற்றும் நகர்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்புற நிலவரித்துறை ஆகிய துறைகளின் பணிகள் குறித்தும் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் விரிவான ஆய்வினை மேற்கொண்டார்கள்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தமது உரையில், 'மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனைத்துத் தரப்பினரும் பயன் பெருகின்ற வகையில் எண்ணற்ற நல்ல பல திட்டங்களை நாளும் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, வருவாய்த் துறையின் சார்பில் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத்திட்டங்களின் பயன்கள் அனைத்தும் உரிய மக்களை உரிய நேரத்தில் சென்றடைந்திடும் வகையில் நாம் அனைவரும் களப்பணியில் அர்ப்பணித்து சிறப்பாக பணியாற்றி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு பெருமையினைத் தேடித்தர வேண்டும்' என்று, பங்கேற்ற அலுவலர்களை அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

இக்கூட்டத்தில் வருவாய்த்துறையின் முதன்மைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் திரு.கு.ஞானதேசிகன், இ.ஆப., முதன்மைச் செயலர் / நிலஅளவை ஆணையர் முனைவர் இரா.கண்ணன், இ.ஆ.ப., முதன்மைச் செயலர் / நில நிருவாக ஆணையர் திரு யத்தீந்தரநாத் ஸ்வைன், இ.ஆ.ப., மற்றும் முதன்மைச் செயலர் / நில சீர்திருத்த ஆணையர் திருமதி ஜெயஸ்ரீ ரகுநந்தன், இ.ஆப., நகர்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்புற நிலவரித்துறையின் இயக்குநர் திரு.எஸ் முருகையா, இ.ஆப., மற்றும் தொடர்புடைய துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

முதன்மைச் செயலாளருக்காக,

வருவாய்த்துறை, தலைமைச்செயலகம் சென்னை 9.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**